# இறுதிப் பயணம்

மவ்லானா வஹீதுத்தீன் கான்



# இறுதிப் பயணம்

**மவ்லானா வஹீதுத்தீன் கான்**

தமிழில்
ஃபைஸ் காதிரி

Goodword

First Published Oct-2022

This book is a Tamil translation of
Aakhirat Ka Safar by Maulana Wahiduddin Khan.

This book is copyright free.

CPS International
Centre for Peace and Spirituality International
1, Nizamuddin West Market, New Delhi – 110013, India.
e-mail: info@cpsglobal.org
www.cpsglobal.org

Goodword Books
A-21, Sector 4, Noida – 201301, Delhi NCR, India.
e-mail: info@goodwordbooks.com
www. Goodwordbooks.com

Center for Peace and Spirituality USA
2665, Byberry Road, Bensalem, PA 19020, USA.
e-mail: kkaleemuddin@gmail.com

Goodword Books – Chennai
324, Triplicane High Road, Chennai-600005, India.
e-mail: chennaigoodword@gmail.com
Mob: +91 97908 53944 / +91 96001 05558

## மரணம் எனும் கருத்தாக்கம்

*மரணம்* (death) *என்னும் சொல்லுக்கான பொருளை நீங்கள் ஆங்கில அகராதியில் தேடினால் அதில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும்:*

"Permanent cessation of life" *(வாழ்க்கையின் நிரந்தர முடிவு)*

*மரணத்தின் இந்த அகராதி விளக்கம், அதன் எதிர்மறையான தோற்றத்தை அளிக்கிறது. இதன் பொருள், "ஒருவன் மனிதனாகப் பிறந்து குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு உயிருடன் இருந்து நிரந்தரமாக அழிந்து விடுதல்; அவனது அனைத்து வித ஆசைகளும்* (desires) *அனைத்துவிதத் தகுதிகளும் மீண்டும் உயிர் பெற்று எழ முடியாத வகையில் அழிந்து விடுதல்" என்பதாக இருக்கிறது.*

*இந்தக் கருத்திற்கு எதிராக இஸ்லாம், வாழ்க்கையின் உடன்பாடான கருத்தாக்கத்தைத் தருகிறது. இஸ்லாத்தின்படி மரணம் வாழ்க்கையின் முடிவல்ல, மாறாக அது மனிதனின் மற்றொரு வாழ்க்கைக்கான தொடக்கமாக இருக்கிறது.*

Death is not the end of life. Death marks the beginning of the second phase of human life.

இஸ்லாத்தின்படி மனிதன் ஒரு நிரந்தரப் படைப்பாகப் (eternal being) படைக்கப்பட்டு இருக்கின்றான். பிறகு அவனுடைய ஆயுட்காலம் (life span) இரு பகுதிகளாகப் பங்கிடப்பட்டு விட்டது. மரணத்திற்கு முந்தைய வாழ்க்கைப் பகுதி - மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைப் பகுதி. மரணத்திற்கு முந்தைய வாழ்க்கைக் காலம், முன்னேற்பாட்டிற்கான இடமாகவும் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக் காலம், அந்த முன்னேற்பாட்டின் அடிப்படையில் நிரந்தர விளைவைச் சந்திக்கின்ற இடமாகவும் இருக்கிறது.

இந்தப் படைப்புத் திட்டத்தின்படி மனிதன் மரணத்திற்கு முந்தைய வாழ்க்கையை முன்னேற்பாட்டிற்கான காலமாகக் (preparatory period) கருதி முழுக்க முழுக்க அதற்காகவே அதைக் கழிக்க வேண்டும். ஏனென்றால் மரணத்திற்குப் பின் வரவிருக்கும் வாழ்க்கைக் காலத்தில் நற்செயல்கள் புரிவது என்பது இல்லை. மாறாக அதில் நற்செயல்களின் அடிப்படையிலான விளைவை மட்டுமே அடைய இயலும்.

ஒரு மரண நிகழ்வு உண்மையில் வாழ்க்கைக்கான செய்தியாக இருக்கிறது. ‘செய்யவேண்டிய(நல்ல)வற்றை இன்றே செய்து

கொள்ளுங்கள். ஏனென்றால் நாளை அதற்கான நேரம் எஞ்சியிருக்காது' என்பதுதான் மரணம் தரும் செய்தி.

## முதல் வாழ்க்கை – இரண்டாம் வாழ்க்கை

மனிதன் பிறந்து தற்கால உலகிற்கு வரும்போது அது அவனுடைய முதல் வாழ்க்கையாக இருக்கிறது. எந்த எதிர்பார்ப்புமின்றியே அவனுக்கான சகலமும் இங்கே அவன் இருக்கக் காண்கிறான். பிறந்த உடனே அன்பைப் பொழியும் ஒரு குடும்பம் கிடைத்து விட்டதையும், உச்சபட்ச நிலையில் தனக்கேற்ற உலகம் அவனுக்குக் கிடைத்திருப்பதையும் அவன் காண்கிறான். 'இது இல்லாமல் வாழ்வது சாத்தியமே இல்லை' என்னும் அளவிற்கு ஒரு முழுமையான 'வாழ்வாதாரத் துணை அமைப்பு' (life support system) அவன் கிடைக்கப் பெற்றிருக்கின்றான். இந்த அனைத்துப் பொருள்களும் அவனுக்கு ஒருதலைப்பட்சமாகக் கிடைக்கின்றன. இதை அவன் அறிவுப்பூர்வமாக உணர்ந்திருந்தாலும் சரி, உணராதிருந்தாலும் சரி.

இவ்வாறு ஒரு குறுகிய காலக்கட்டம் வாழ்ந்த பிறகு மனிதன் இறந்து விடுகிறான். மரணத்திற்குப் பிறகு மீண்டும் 'தனியாக' இருக்கும்

ஓர் உலகை அவன் அடைகிறான். இப்பொழுதும் அவன் முன்பைப் போலவே உயிரும் உணர்வும் கொண்ட ஒருவனாகத்தான் இருக்கின்றான். ஆனால் முந்தைய உலகில் கிடைக்கப்பெற்றிருந்த அனைத்துப் பொருள்களும் அவனிடமிருந்து நிரந்தரமாக விடுபட்டுப்போய்விட்டன.இப்பொழுது பாதுகாப்பான - நிம்மதியான வாழ்க்கையை அவன் வாழ வேண்டுமென்றால், அந்தப் பொருள்கள் அனைத்தும் மீண்டும் அவனுக்குப் புதிதாகக் கிடைக்க வேண்டும் என்கின்ற தேவையைக் கொண்டவனாக அவன் ஆகிவிடுகின்றான்.

மனிதனுக்கு முதல்கட்ட வாழ்க்கை அனுபவம் கொடுக்கப்படுவதெல்லாம் அவனுடைய உள்ளத்திலிருந்து இந்தப் பிரார்த்தனை வெளிப்பட வேண்டும் என்பதற்காகத்தான்: “இறைவா! நான் எதற்குரியவனாகவும் இல்லாமல் இருந்த முந்தைய வாழ்வில் எனக்கு நீ வழங்கிய பொருட்களைப் போலவே இரண்டாம் கட்ட வாழ்விலும் என்னுடைய தேவைக்கான அனைத்துப் பொருள்களையும் இன்னும் அதிகப்படுத்தித் தருவாயாக! முதல்கட்ட வாழ்வில் உன்னுடைய கொடைகளை நான் அனுபவித்தது போலவே இரண்டாம் கட்ட வாழ்விலும் அவற்றை

*முழுமையான வடிவத்தில் எனக்குக் கிடைக்குமாறு செய்துவிடுவாயாக! முதல்கட்ட வாழ்க்கையில் நீ எனக்குக்கொடுத்ததெல்லாம்எனக்குஎந்தஉரிமையும் இல்லாத நிலையில்தான் கொடுத்தாய். இரண்டாம் கட்ட வாழ்விலும் நான் எந்த உரிமையையும் பெற்றிராத நிலையில் எனக்கு அனைத்தையும் வழங்குவாயாக! முதல்கட்ட வாழ்க்கை எனக்கு உன்னுடைய அருட்கொடைகளின் தொடக்கமாக இருந்தது. இரண்டாம் கட்ட வாழ்க்கையில் இந்த அருட்கொடைகளை எனக்காக நிறைவு செய்வாயாக!“*

## மரணத்திற்குப் பின்

*மரணம் ஒவ்வொரு மனிதனுக்கும் விரும்பத்தகாத ஒரு நிகழ்வாகத்தான் இருக்கிறது. மனிதன் நீண்ட காலத்திற்கு வாழ விரும்புகிறான். ஆனால் அவன் திடீரென ஒருநாள் இறந்து விடுகிறான். ‘ஒரு மனிதன் பயணம் செய்து கொண்டிருந்தான்... அவன் நெடுந்தூரம் செல்ல விரும்பினான்... ஆனால் இலக்கை அடைவதற்கு முன்பாகவே மரணம் ஒருதலைப்பட்சமான தீர்ப்பின் கீழ் அவனுடைய வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது’ என்பதுபோல் தெரிகிறது.*

இப்படி ஏன் நடக்கிறது?இது ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரின் கேள்வியாகவும் இருக்கிறது. இது எப்படி நிகழ்கிறது என்பதை ஒவ்வொருவரும் அறிய விரும்புகின்றனர். வாழ்க்கை என்பது என்ன? மரணம் என்பது என்ன? மனிதன் நீண்ட நாட்கள் வாழ விரும்புகிறான். ஆனால் இடையிலேயே அவனது விருப்பமின்றியே மரணத்தின் தீர்ப்பை அவன் ஏற்க வேண்டியதாகி விடுகிறது.

இது தொடர்பாக நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, DNA-வின் புதிய கண்டுபிடிப்பில் இதற்கான முதல் தடயம் கிடைக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கான DNA இருப்பதை அறிந்திருப்போம். அந்த DNA அவனது ஆளுமையின் முழுமையான கலைக்களஞ்சியமாக (encyclopedia) இருக்கிறது. அந்த DNA-வைக் குறியீட்டு நீக்கம் (decode) செய்து பார்த்தால், அது நம்முடைய மிகப்பெரிய கலைக்களஞ்சியத்தை விடவும் பல நூறு மடங்கு பெரியதாக இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனின் DNA-விலும் அவனது ஆளுமையின் அனைத்துச் சிறிய பெரிய பண்புக்கூறுகள் இடம்பெற்றிருக்கும்.

ஆனால் வியப்பிற்குரிய விஷயம் என்பது, மனித ஆளுமையின் ஒரேயொரு அம்சம் மட்டும்

DNA-வில் பதிவாகவில்லை. ஒரு மனிதனின் DNA-வை ஆய்வு செய்து, அவனைக் குறித்த எல்லா விஷயங்களையும் அறிந்துகொள்ள முடியும். ஆனால் ஒரேயொரு விஷயத்தை மட்டும் அறிந்து கொள்வது சாத்தியமில்லை. 'ஒரு மனிதனின் மரணம் எப்பொழுது நிகழும்?' என்பதுதான் அது. இது இயற்கையின் புறத்திலிருந்து 'மனிதன் தன்னுடைய தகுதி நிலையின்படி மடிந்து போகும் படைப்பு அல்ல' என்பதன் பிரகடனமாகும். தொடர் வாழ்க்கைதான் மனிதனுக்கானது. உண்மையான பொருளில் மனித ஆளுமையின் மீது மரணம் என்ற ஒன்று வரப்போவதில்லை.

இங்கே மனித ஆளுமையின் மற்றொரு அம்சத்தையும் இனைத்துக் கொள்ளுங்கள். உயிருள்ள மனிதன் மட்டுமே 'நாளை' (tomorrow) என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கின்றான். விலங்கினங்கள் அனைத்தும் 'இன்றில்' (today) வாழ்கின்றன. அவற்றுக்கு 'நாளை' என்பது இல்லை. தங்களுடைய குறுகிய அறிவுத்திறனின் காரணத்தால் விலங்கினங்களின் பிரச்சினை என்பது 'இன்றில்' பிறந்து 'இன்றி'லேயே மடிந்து போவதுதான். ஆனால் விதிவிலக்காக மனிதன் 'நாளை' என்னும்

கருத்தாக்கத்தைக் கொண்ட ஒரு படைப்பாக இருக்கின்றான்.

இந்த விஷயத்தில் சரியான கருத்தை நிறுவுவதற்கு ஓர் அம்சத்தைச் சேர்த்துக் கொள்வது அவசியமாக இருக்கிறது. இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் எண்ணற்ற இலட்சியங்களோடு (ambitions) பிறக்கின்றான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் 'ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆசைகள் நிறைவேறாத நிலையிலேயே இறந்து விடுகிறான்'என்பது இதன் மற்றொரு யதார்த்த நிலையாக இருக்கிறது. இந்த அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் நிறைவேறாத ஆசைகளின் (unfulfilled desires) வழக்காக இருக்கின்றான். இந்தப் பிரபஞ்சத்தின் பொதுவான அமைப்பைப் பார்க்கும் போது, இந்நிலை முற்றிலும் பொருந்திப் போகாத ஒன்றாக இருக்கிறது. எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தில் மனிதன் மட்டுமே இந்தப் பிரச்சினையை எதிர்கொள்கிறான். அவனைத் தவிர வேறு எந்தப் படைப்பும் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்தில்லை.

இந்தப் பிரச்சினைக்கான பதில் இருந்தாக வேண்டும் என்பதையும் பிற படைப்பினங்களுக்குக் கிடைத்திருப்பதைப் போன்ற அதே மனநிறைவு

மனிதனின் ஆசைகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதையும் இந்தச் சூழ்நிலை காட்டுகிறது. தற்போதைய உலகத்திற்குப் பிறகு இன்னொரு உலகம் வர இருக்கிறது என்பதையும், அது மனிதன் தன்னுடைய ஆசைகள் குறித்து முழுமையான மனநிறைவைப் பெறுகின்ற உலகம் என்பதையும் இந்தச் சூழ்நிலை காட்டுகிறது.

இது தொடர்பான மற்றொரு அம்சமும் இதைப் போலவே மிக அதிக முக்கியத்துவம் கொண்டது. மனிதனுக்குள் இயல்பிலேயே 'நீதி'யின் மனநிலை கிடைக்கப் பெறுகிறது என்பதே அது. மனிதன் இயல்பாகவே இந்த உலகில் தீர்ப்புகள் நீதியோடு வழங்கப்பட வேண்டும் என்றும், நல்ல மனிதர்களுக்கு அவர்களது நன்மைக்கான கூலியும், தீய மனிதர்களுக்கு அவர்களது தீமைக்கான தண்டனையும் கொடுக்கப்பட வேண்டும் என்றும், விரும்புகிறான். இது மனித இயல்பின் கோரிக்கை. இந்தக் கோரிக்கையும் கூட 'நீதியின் கோரிக்கைகள் முழுமை பெறும் ஓர் உலகம் வரவேண்டும்' என்றே விரும்புகிறது. ஏனென்றால் தற்போதைய உலகில் இவ்வாறு நடப்பது சாத்தியமில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட கேள்விகளை முன்வைத்துச் சிந்தித்துப் பார்த்தால் மறுமை

எனும் சித்தாந்தம் முற்றிலும் இன்றியமையாத சித்தாந்தம் என்பது தெரிகிறது. மறுமை எனும் சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஒவ்வொரு கேள்விக்கும் முழுமையான பதில் கிடைத்துவிடுகிறது. ஒவ்வொன்றும் தனக்குரிய இடத்திற்கு வந்து விடுகிறது.

## Everything falls into place

## நேரம் முடிந்து விட்டது!

பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்குத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாணவர்கள் மேஜையை நோக்கிக் குனிந்தவாறு தத்தமது கேள்விகளுக்குப் பதில் எழுதிக்கொண்டிருந்தனர். இறுதியில் தேர்வுக்கான நேரம் முடிவடைந்துவிட்டது. உடனே தேர்வு அறையில் இருந்த பொறுப்பாளர்களின் சார்பாக பிரகடனப் படுத்தப்பட்டது: “எழுதுவதை நிறுத்துங்கள், நேரம் முடிவடைந்து விட்டது”

## “Stop writing time is over”

தேர்வு அறையில் நடைபெற்ற இதே நிகழ்வுதான் பரந்த வாழ்க்கையின் நிகழ்வாகவும் இருக்கிறது. இந்த உலகில் ஆண், பெண் ஆகிய

ஒவ்வொருவரும் ஒரு மிகப்பெரிய தேர்வு அறையில் உள்ளனர். இங்கே ஒவ்வொரு மனிதனும் தனக்கான தேர்வை எழுதிக் கொண்டிருக்கின்றான். ஒவ்வொருவருக்கான கால அவகாசமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால அளவு முடிவுற்ற உடனே இறைவனின் வானவர் வந்து தம்முடைய மவுன மொழியில் “உங்களுடைய செயல்பாட்டிற்கான நேரம் முடிவடைந்துவிட்டது” என்று பிரகடனப்படுத்தி விடுகிறார். இப்பொழுது நீங்கள் மரணம் அடைய வேண்டும்; மரணமடைந்து உங்களுடைய படைப்பாளனும் அதிபதியுமாகிய இறைவனுக்கு முன் பதில் அளிப்பதற்காகச் சென்றாக வேண்டும். படிப்பு தொடர்பான தேர்வு என்பது ஒவ்வொரு மாணவனோடும் நேர்கின்ற ஒன்று. இது ஓர் உதாரணம். இதைக் கொண்டே ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரும் விரிவான பொருளில் வாழ்க்கையின் தேர்வைக் குறித்துப் புரிந்துகொள்ள முடியும். வாழ்க்கை என்பது தேர்வு நிலையின் பெயர். மனிதன் தன்னுடைய நற்செயல்களின் விளைவைப் பெறுவதற்காக அடுத்த உலகிற்கு அனுப்பப்பட்டு விடுவதற்குப் பெயர்தான் மரணம் என்பது.

தேர்வு நடைபெறுகின்ற அறையில் ஒரு மாணவன் எந்த உளவியலோடு இருப்பானோ

அதே உளவியலோடு நாம் நம்முடைய வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டும். இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் வினாத்தாளிற்குச் சரியான முறையில் பதிலளிக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும். தேர்வுக்கான காலம் முழுமை பெற்ற பிறகு அதன் முடிவை எதிர்கொள்ளும் போது அது அவர்களுக்கு வெற்றிக்கான நற்செய்தியாக இருக்க வேண்டுமே அன்றி தோல்வியின் பிரகடனமாக இருக்கக் கூடாது.

## சிந்தித்துக் கொண்டே இருங்கள்

மனிதன் பிறந்து இந்த உலகிற்கு (planet earth) வரும்போது அவனுக்காக இங்கே ஒரு "வாழ்வாதாரத் துணை அமைப்பு" (life support system) இருப்பதை அவன் காண்கிறான். எந்த விலையும் கொடுக்காமலேயே மனிதனின் சிறிய பெரிய தேவைகள் அனைத்தையும் உச்சபட்ச வடிவத்தில் நிறைவேற்றும் அளவிற்கு இந்த அமைப்பு முழுமையாக இருக்கிறது. பூமியிலிருந்து சூரியன் வரை எல்லாம் விதிவிலக்காக மனிதனுக்குச் சேவை செய்து வருகின்றன.

பிறகு மனிதன் திடீரென இறந்துவிடும் ஒரு நாள் வருகிறது. மனிதன் தன்னுடைய சுபாவத்தின்

அடிப்படையில் நிரந்தர வாழ்க்கையை விரும்புகிறான். ஆனால் நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரும் தன்னுடைய விருப்பத்திற்கு எதிராக இந்த உலகை விட்டு நிரந்தரமாகச் சென்றுவிடும் 'அந்தச் சம்பவம்' நிகழ்ந்து விடுகிறது.

பூமியில் பிறக்கும் மனிதன் இரு விஷயங்களின் அனுபவத்தைப் பெறுகிறான். முதலில் பிறப்புக்கான அனுபவம்; பிறகு மரணத்திற்கான அனுபவம். மனிதன் பொறுப்புணர்வோடு இந்த நிகழ்வுகள் குறித்துச் சிந்தித்தால் உறுதியாக அவன் மிகப்பெரிய உண்மையைக் கண்டடைந்து கொள்வான். மனிதனைப் படைத்து இந்த பூமியில் குடியமர்த்தியது வெகுமதியாக அல்ல; சோதனையாக என்பதே அந்த உண்மை.

இந்த உலகத்தில் மனிதன் தன்னைச் சுதந்திரமானவனாகக் கருதுகிறான். யார் தம்முடைய சுதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்துகிறார்கள். யார் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும், யார் நியதிகளின் அடிப்படையிலான வாழ்க்கையை வாழ்கிறார்கள், யார் நியதியற்ற வாழ்க்கை முறையை மேற்கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான்.

மனிதன் பொறுப்புணர்வோடு சிந்தித்துப்பார்த்தால், மரணம் உண்மையில் படைப்பாளனுக்கு முன் தன்னை முன்னிறுத்துவதற்கான நாள் என்ற உண்மையைத் தெரிந்துகொள்வான். மனிதன் தனது உண்மை நிலையின்படி ஒரு நிரந்தரப் படைப்பாக இருக்கின்றான். ஆனால் அவனுடைய இந்த வாழ்க்கைக் காலம் இரண்டு பகுதிகளில் பிரிக்கப்பட்டு விட்டது. மரணத்திற்கு முந்தைய வாழ்க்கைக் காலம் (pre death period) மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக் காலம் (post death period).

மரணத்திற்கு முந்தைய வாழ்க்கைக் காலம் சோதனைக்கானது. மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக் காலம் முந்தைய பதிவேட்டின்படி வெகுமதியோ தண்டனையோ வழங்குவதற்கானது.

மனிதன் இந்த உலகில் தன்னை உயிரும் உணர்வும் கொண்ட உருவத்தில் காண்கிறான். உயிரும் உணர்வும் கொண்ட இந்த ஆளுமை ஒரு நிரந்தர ஆளுமையாக இருக்கிறது. மரணத்திற்கான நாள் என்பது, இந்த ஆளுமையை நிழல் உலகத்திலிருந்து வெளியேற்றி, உயிரும் உணர்வும் கொண்ட அதே நிலையில் நிரந்தரமான அடுத்தக்கட்ட உலகிற்கு இடமாற்றம் செய்வது ஆகும்.

ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவர் மீதும் இந்த நொடி வந்தே தீரும். அது சிந்தித்துப் பார்க்க முடியாத அளவுக்குக் கடுமையான ஒரு கணமாக இருக்கும். மரணத்திற்குப் பின் வரக்கூடிய வாழ்க்கைக் காலத்தில் அதே மனிதன்தான் இருப்பான். ஆனால் அவனது வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் நிரந்தரமாக அவனிடமிருந்து விடுபட்டுப் போயிருக்கும். அவனுக்குப் பின்னால் நிரந்தரமாக அவனிடமிருந்து விலகி விட்ட உலகமும், அவனுக்கு முன்னால் ஒன்றுமற்ற நிலையில் நிரந்தரமாக இருக்க வேண்டிய உலகமும் இருக்கும். வரவிருக்கின்ற இந்த நாளுக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்பவன்தான் அறிவுடையவனாக இருக்கின்றான்.

## வரலாற்றுத் திருப்பம்
## (Break in History)

அரசின் சேவை முறைகளில் ஒன்று அரசுப் பணிபுரிபவர், முறையான அனுமதி இன்றி அலுவலகத்திற்கு வரவில்லையெனில் அதைப் 'பணியிடை முறிவு' (break in service) வழக்காக எடுத்துக் கொள்வதாகும். 'பணியிடை முறிவு' என்பதற்குப் பொருள் அவனுடைய 'பணி மூப்பு' (seniority) முடிந்துவிட்டது என்பதே. அவன் தன் பணி உரிமைப்படி பணியில் அமர்த்தப்பட்ட

*முதல் நாளில் இருந்த நிலைக்கே திரும்பி விடுவான். அவனது கடந்த கால நிலையின் அடிப்படையில் பணி உயர்வுக்கான உரிமையை அவன் இழந்து விடுகிறான்.*

A break in service is any separation from employment status

*இந்த நியதி பெரிய அளவில் ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கும் பொருந்தும். இந்த இரண்டாவது பொது நியதியை 'வரலாற்று முறிவு'* (break in history) *என்று சொல்லலாம். அதாவது வரலாறு முடிவடைந்து விடுவது ஒரு மனிதன் தன்னுடைய செயல்பாடுகளால் உருவாக்கிய வரலாறு திடீரென அழிந்து வரலாற்றின்மையின் காலத்தின்பால் திரும்பி விடுவது.*

*இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் தான் உருவாக்கிய வரலாற்று அஸ்திவாரத்தின் மீது நின்றிருக்கிறான். ஒரு மனிதன் இங்கே பிறந்து மெல்லமெல்ல வளர்கிறான். இங்கே அவனுக்குக் கிடைக்கும் பல்வேறு வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தனக்கான ஒரு வரலாற்றை அவன் உருவாக்குகிறான். வீடு, சொத்து, குடும்பம், கூட்டம், புகழ், அதிகாரம், செல்வம், உடைமைகள் போன்ற அனைத்தும் அவனைச்சுற்றிச் சேர்ந்து விடுகின்றன.*

இவ்வாறு அவனால் உருவாக்கப்பட்ட சொந்த வரலாற்றின் மூலமாக அவன் அடையாளப்படுத்தப் படுகிறான். இதன் மூலமாக அவன் தன்னை அறிகிறான்; இதன் மூலமாகவே பிறரும் அவனை அறிகின்றனர். இது ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கும் நேர்கின்ற ஒன்றுதான். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தொடர் முயற்சியின் மூலமாகத் தனக்கான வரலாற்றை உருவாக்கி அதன் மீது நிற்கின்றான்.

ஆனால் எந்த ஒரு மனிதனும் நீண்ட காலம் வரை தன்னுடைய இந்த வரலாற்றில் வாழும் வாய்ப்பைப் பெறுவதில்லை. நூறுஆண்டுகளுக்குள்ளாகவே 'இறப்பு' எனப்படும் 'அந்தப் பொழுது' திடீரென வந்துவிடுகிறது. மரணம், தடுக்க முடியாத ஒரு தீர்ப்பாக ஒவ்வொரு மனிதனுக்கும் நேர்கிறது. பிறகு திடீரென அவனை மரணத்திற்கு முந்தைய வாழ்க்கை காலத்திலிருந்து மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை காலத்திற்குக் கொண்டு சேர்த்து விடுகிறது.

இந்த வகையில் மரணத்தை ஒரு 'வரலாற்று முறிவு' எனலாம். இது ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கும் நேரக்கூடிய ஒன்றுதான். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தன்னுடைய

ஆற்றல்கள் அனைத்தையும் செலவு செய்து, எதிர்பார்ப்புகளையும் ஆசைகளையும் கொண்ட ஓர் உலகை உருவாக்குகின்றனர். தான் உருவாக்கிய இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்து கொண்டிருக்கத் திடீரென அவனுக்கான ‘மரண வேளை’ வந்து விடுகிறது. தான் உருவாக்கிய இந்த உலகை விட்டுத் திடீரென அவன் வேறொரு உலகிற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறான். அவனுக்குப் பின்னால் நிரந்தரமாக அவன் விட்டுவிட்ட, அவனால் உருவாக்கப்பட்ட உலகம் இருக்கும். அவனுக்கு முன்னால் ஒரு நிரந்தரப் பாலைவனம் இருக்கும். அதற்காக அவன் எதையும் சேர்த்து வைத்திருக்க மாட்டான். இலாப மனநிலையில் வாழ்ந்து வந்தவன், திடீரென முழுமையான இழப்புடைய காலத்திற்குள் நுழைந்து விடுகிறான்.

மரணத்திற்கு முந்தைய வாழ்க்கைக் காலம் என்பது முதலும் முடிவுமான வாய்ப்பே. இதன் பிறகு மற்றொரு வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை. இந்த முதல் வாய்ப்பை உலகியல் பொருட்களை அடைவதற்காகச் செலவழித்தவன், மரணத்திற்குப் பிந்தைய வாழ்வில் முழுமையான இழப்பில் வாழும்

நிர்ப்பந்தத்தில் இருப்பான். ஏனென்றால் மரணம் அவனது முந்தைய வரலாற்றிலிருந்து அவனைப் பிரித்துவிடும். மரணத்திற்குப் பிறகு புதிய வரலாறு படைக்கும் வாய்ப்பு நிரந்தரமாக அவனிடமிருந்து பறிக்கப்பட்டுவிடும். மனிதன் இழந்து கொண்டிருக்கும் 'இன்றைய' வாய்ப்பு எவ்வளவு விசித்திரமானது? மனிதன் எதிர்கொள்ளப் போகும் அந்த 'நாளைய' இழப்பு எவ்வளவு பயங்கரமாக இருக்கும்? அதிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வது யாருக்கும் சாத்தியமாக இருக்காது.

## உலகக் கட்டமைத்தல் – மறுமைக்கு ஆயத்தமாகுதல்

தற்போதைய உலகில் மனிதர்களைப் பார்க்கும்போது ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பணிகளில் திளைத்திருப்பதைக் காணமுடியும். இந்தத் திளைப்பு யாரிடமும் பேசுவதற்கோ கேட்பதற்கோ நேரம் இல்லாத அளவிற்கு அதிகமாக இருக்கிறது. மனிதர்களிடம் தம்முடைய நேரம், பணம் ஆகியவற்றின் ஒற்றைப் பயன்பாடுதான் இருக்கிறது. அதாவது தம்முடைய நேரம், பணம் ஆகியவற்றைத் தமது விருப்பத்திற்குரிய இலக்கை அடைவதற்காக முழுமையாக பயன்படுத்திவிடுவது.

மனிதர்களின் இந்தத் திளைப்பின் நோக்கம் என்ன? அந்த நோக்கம் ஒன்றே ஒன்றுதான். தம் உலக வாழ்க்கையைச் சிறப்பினும் சிறப்பாக்குவது; உலகில் தம் எதிர்காலத்தைக் கட்டமைப்பது. ஆனால் மரணம், வாழ்க்கையின் இந்தக் கண்ணோட்டத்தை மறுக்கக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய இறுதி விளைவும் அவன் விரைவில் இறந்து போவதுதான். அவன், தான் உருவாக்கிய உலகை முழுமையாக விட்டுவிடுகிறான். அவன் இப்பொழுது தன்னந்தனியாகக் குறிப்பிட்ட ஓர் உலகின்பால் சென்றுவிடுகிறான். அந்த உலகிற்காக அவனிடம் எதுவும் இருப்பதில்லை.

ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரின் நிலையைப் பொறுத்தவரை, அவர்கள் பிறந்து இந்த உலகிற்கு வரும்போது அவர்களைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் சிந்திப்பதைப் போலவே அவர்களும் அதே உலகியல் கலைச்சொற்களைக் கொண்டு சிந்திக்கத் தொடங்கிவிடுகின்றனர். அவர்களுக்கு முன்பிருந்தவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்த அதே உலகியல் வேலைகளில் அவர்களும் ஈடுபடத்தொடங்கிவிடுகின்றனர். இந்தச் சூழ்நிலையின் விளைவாகத்தான் உலகியல் சிந்தனை, வரலாற்றுத் தொடர்ச்சியின் ஒரு பகுதியாகி விட்டது.

இந்த உலகியல் சிந்தனை எந்த அளவிற்குக் கலாச்சார மரபில் கலந்து போய்விட்டதென்றால் அதிலிருந்து விடுபட்டுச் சிந்திப்பதென்பது பொதுவாக ஆண் பெண் ஆகிய எந்த ஒருவருக்கும் சாத்தியமில்லை.

மனிதனின் உண்மையான தேர்வுக்கான இடம் இதுதான். உண்மையான வெற்றி அடைய மனிதன் இந்த வரலாற்றுத் தொடரிலிருந்து வெளியே வந்து சிந்திக்க வேண்டும். அவன் மரபு வழியிலான கலாச்சாரத்திலிருந்து விடுபட்டு உண்மையின் அடிப்படையில் தன்னுடைய கருத்தை உருவாக்கவேண்டும். இப்படிச் செய்யும் மனிதர்கள், ‘அடிப்படையான பிரச்சினை, உலகைக் கட்டமைத்தல் அல்ல; மறுமைக்காக நம்மை ஆயத்தப்படுத்துதல்தான்’ என்பதை உடனே அறிந்துகொள்வர். மரணத்திற்கு முந்தைய வாழ்வில் மரணத்திற்குப் பிந்தைய வாழ்வுக்கான தயாரிப்பைச் செய்துகொள்வதுதான் ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கமான ஆதாரப்பணி. மரணத்திற்குப் பின் வரக்கூடிய வாழ்க்கைக் காலத்தில் வெற்றி பெற்ற மனிதர்களாகக் கருதப்படும் அளவிற்கு அவர்கள் தம்மைத் தகுதிமிக்கவர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டும்.

## மூச்சுத் தொழில்

*தில்லியில் நமது பகுதியில் ஒரு மனிதர் இருந்தார். மக்கள் அவரை 'முல்லாஜி' என்று அழைத்து வந்தனர். அவர் எருமைகளை வளர்த்துப் பால் வியாபாரம் செய்து வந்தார். இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு வியாபாரியோடு அவருக்கு நட்பு இருந்தது. அவர் இரும்புத் தொழில் செய்துவந்தார். ஒரு முறை 'முல்லாஜீயினுடைய எருமை ஒன்று இறந்து போனது. அவர் தம் நண்பரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது 'என்னுடைய எருமை ஒன்று இறந்துவிட்டது' என்றார். இதைக் கேட்டதும் இந்து மதத்தைச் சேர்ந்த அந்த இரும்பு வியாபாரி 'முல்லாஜி' உங்களுடைய தொழில் மூச்சுத் தொழிலாக இருக்கிறது. "இருந்தால் உண்டு; இல்லை என்றால் இல்லை" என்றார். அதாவது மூச்சிருக்கும் வரை மட்டும்தான் எருமையும் உயிருடன் இருக்கும். மூச்சு நின்றதும் எருமையின் வாழ்க்கையும் முடிந்துபோகும்.*

*இரும்பு வியாபாரியின் இந்தக் கருத்து 'முல்லாஜி'யின் வியாபாரம் தொடர்பாக சொல்லப்பட்டது. ஆனால் உண்மையில் உயிருள்ள ஒவ்வொரு மனிதனின் பிரச்சனையும் இதுதான். இரும்பு வியாபாரி இப்படித்தான்*

சொல்லியிருக்கவேண்டும்: “முல்லாஜி நம் இருவரின் பிரச்சனையும் மூச்சு தொடர்பானதுதான். இருந்தால் உண்டு, இல்லையென்றால் எதுவும் இல்லை.”

வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு அமைப்புமுறை மனித உடலில் இருப்பதை நாம் அறிவோம். அந்த வரிசையில் மனிதனுக்குள் இருக்கும் ஓர் அமைப்பு முறைக்கு ‘சுவாச அமைப்பு’ (respiratory system) என்று பெயர். இந்த அமைப்பு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இந்த அமைப்பு வேலை செய்யும்வரை மனிதன் உயிருடன் இருக்கிறான். இந்த அமைப்பு வேலை செய்யவில்லை எனில் சில நொடிகளுக்குள்ளாகவே மனிதன் இறந்து போவான்.

ஒரு மனிதனுக்கு மரணம் வரும்போது கடைசி தருணத்தில் அவனுடைய மூச்சு நிலைகுலைந்து போய்விடுகிறது. இந்தநிலையே ‘தொண்டைக்குழி அடைத்தல்’ எனப்படுகிறது. இது மனிதனின் சுவாச அமைப்பு சீராக இயங்குவதை நிறுத்திவிடும் தருணம். இந்த நேரத்தில் மனிதனின் தொண்டையிலிருந்து ஒருவித சப்தம் வரத் தொடங்கிவிடுகிறது. இது சிறிது நேரம் நீடிக்கிறது. பிறகு ‘மரணம்’ எனப்படும் அந்த நிலை மனிதனை கவ்விக் கொள்கிறது.

பிறருடைய மரணம் உண்மையில் நம்முடைய மரணத்தின் நினைவூட்டலாக இருக்கிறது. 'இறப்பவன் இறந்துவிட்டதைப் போலவே உயிருடன் இருப்பவனும் இறந்துவிடுவான்' என்பதை ஒவ்வொரு மரண நிகழ்வும் மனிதர்களுக்கு உணர்த்துகிறது. ஒவ்வொரு மரண நிகழ்வும் "மனிதர்களே! எதிர்காலத்திற்காக உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால் இறுதியில் உங்களது பங்குக்கு வரப்போவது உங்களது எதிர்காலம்தானே அன்றி உங்களுடைய கடந்த காலமோ நிகழ் காலமோ அல்ல" என்பதை நினைவூட்டுகிறது.

## துயர்மிகு விளைவு

'ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி அதிகபட்சமான பணத்தைச் சம்பாதிப்பதெல்லாம் நரகத்தின் விலை மிகுந்த சீட்டை வாங்குவதற்காக மட்டும்தான்' இந்த வாக்கியம் பெரும்பாலும் என்னுடைய நாவிலிருந்து மிகுந்த வலியோடு வெளிப்பட்டுவிடுகிறது.

இன்றைய மனிதர்களை நான் பார்க்கிறேன். அவர்கள் தம்முடைய நேரம் அனைத்தையும் பணம் சம்பாதிப்பதிலேயே செலவழித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய இரவு பகல்

சிந்தனை ஒன்றே ஒன்றுதான். அதாவது 'அதிகமாகப் பணம் சம்பாதிப்பது எப்படி?' திருக்குர்ஆனின் 102-ஆவது அத்தியாயத்தில் 'தகாஸுர்' எனக் கூறப்பட்டிருப்பது இதைத்தான். அதாவது பணத்தை ஈட்டி, ஈட்டி சவக்குழிக்குச் சென்று விடுதல். பிறகு நரகத்தை எதிர்கொள்ளுதல். இன்றைய நிலையின்படி என்பது மதச் சார்பற்றவர்கள், மதத்தைச் சார்ந்தவர்கள் ஆகிய இருபிரிவினருமே ஒரே ஒரு விஷயத்தைத்தான் தம்முடைய இலக்காகக் கொண்டுள்ளனர். அதாவது சாத்தியமுள்ள அனைத்து வழிகளின் மூலமாகவும் செல்வத்தை ஈட்டுதல்.

இந்தச் செல்வத்தின் பயன்பாடும்கூட ஒன்றே ஒன்றுதான். அதாவது தம்முடைய உலகியல் மகிழ்ச்சியை அதிகப்படுத்துவது. வீடு, வாகனம், ஆடைகள் போன்றவற்றில் முன்னேற்றம் காண்பது. ஒரு மனிதன் மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் அது வெறும் சடங்குக்காக மட்டும்தான். வாழ்க்கையின் நோக்கம் என்ற கோணத்தில் பார்த்தால் கிட்டத்திட்ட எல்லோருடைய இலக்கும் ஒன்றுதான். அதாவது உலகியல் முன்னேற்றம்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் ஒரு கசப்பான விளைவில் முடிந்து கொண்டிருக்கிறது. அதாவது

'அனைத்து உலகியல் முன்னேற்றங்களையும் விட்டுவிட்டு இந்த உலகிலிருந்து சென்றுவிடுதல். இது மிகவும் கடுமையான நிலை ஆகும்.' தங்களுடைய எண்ணத்தின்படி அவர்கள் முன்னேற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். ஆனால் 'உங்களுடைய பயணம் அழிவின் படுகுழியை நோக்கியதாக மட்டுமே இருந்தது. முன்னேற்றத்தின் இலக்கை நோக்கி அல்ல' என்பதை மரணம் அனைவருக்கும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

மனிதனின் இந்த விளைவு எவ்வளவு விசித்திரமானது? அவன் தன்னுடைய சிறந்த நேரத்தையும் ஆற்றலையும் செலவுசெய்து "நீங்கள் நரகத்தைத் தொலைவிலிருந்து காண்பீர்கள்" (திருக்குர்ஆன் 102:6) என்னும் வசனத்திற்கு ஒப்பாகிக் கொண்டிருக்கிறான். அதாவது சொர்க்கத்திற்காகக் கனவு காணும் ஒருவன் இறுதியில் தன்னை நரகத்தின் படுகுழியில் வீழ்ந்திருப்பவனாகக் காண்கிறான்.

## மரணம் ஒரு நினைவூட்டி

இறந்து விடும் ஒருவனுக்குத்தான் மரணம் மரணமாக இருக்கிறது. உயிருடன் இருப்பவர்களுக்கு அது 'மரண நினைவூட்டி'யாக (reminder) இருக்கிறது. ஒரு மனிதன் இறந்துவிடும்போது பொதுவாகப்

‘பேசிக்கொண்டிருந்த ஒருவன் மவுனமாகிவிட்டான்’ எனத் தோன்றும். ஆனால் அவனது மவுனம் ஒரு பிரகடனமாக இருக்கிறது. “வரவேண்டிய நேரம் என் மீது நிகழ்ந்துவிட்டது. இந்த நேரம் உங்களுக்கும் நிகழும். வரப்போகும் அந்த நேரத்திற்காக உங்களை நீங்கள் தயார்படுத்திக்கொள்ளுங்கள்.” என்பதுதான் அந்தப் பிரகடனம்.

தற்கால வழக்கப்படி ஒருவருடைய ஆயுளில் ஓராண்டு நிறைவுபெற்று அடுத்த ஆண்டு தொடங்கும் போது‘பிறந்தநாள்’ (birthday)கொண்டாடப்படுகிறது. ஆனால் அதை ‘மரணத்தை நினைவு கூறும் நாள்’ எனப் புரிந்துக் கொள்வதுதான் மிகவும் சரியாக இருக்கும். ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருடைய ஆயுளுக்கும் தொடர்ந்து இங்கே “கவுன்ட் டவுன்” (count down) நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ‘உன்னுடைய ஆயுட் காலத்தில் ஓராண்டு மேலும் குறைந்து போய்விட்டது’ என்பதை மட்டுமே ஒவ்வொரு பிறந்தநாளும் காட்டுகிறது. இந்தக் ‘கவுன்ட் டவுனின்’ நிறைவுதான் மரணம் என்பது.

மக்கள் தங்களுடைய பிறந்தநாளை ‘ஹேப்பி பர்த் டே’ என்பதாகக் கொண்டாடுகின்றனர். ஆனால் யதார்த்தத்தின்படி பார்த்தால் விஷயம் இதற்குத் தலைகீழானது. ஒவ்வொரு புதிய

பிறந்தநாளும் மரணம் அல்லது தீர்ப்புநாளின் நேரம் இன்னும் நெருங்கிவிட்டது. மறுமைக்கான தயாரிப்பின் ஓராண்டு இன்னும் குறைந்துவிட்டது, என்பதற்கான நினைவூட்டலாகவே இருக்கிறது.

## வாழ்க்கையின் அக்கரையில்

வெளிப்படையாக மனிதன் முழுமையான ஒருவனாக இருக்கிறான். ஆனால் அவன் குறையுள்ள ஒருவன் மட்டுமே. மனிதனிடம் கண் இருக்கிறது. ஆனால் வெளிப்புற ஒளியின்றி அவனால் பார்க்க முடியாது. அவனிடம் காது இருக்கிறது. ஆனால் வெளிப்புற காற்றின்றி அவனால் கேட்க முடியாது. மனிதனிடம் நடப்பதற்காகக் கால்கள் உள்ளன. ஆனால் பூமியில் சமநிலையிலான ஈர்ப்பு சக்தி இல்லாவிட்டால் அவனால் நடக்கமுடியாது. மனிதனிடம் உணவை உட்கொள்ள வாய் இருக்கிறது. ஆனால் வெளிப்புறத்தில் உணவுப் பொருட்கள் இல்லாதிருந்தால் அவனால் தன்னுடைய உணவுத் தேவையை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

இப்பொழுது இவ்வாறான ஒரு நேரத்தை நினைத்துப் பாருங்கள்! நீங்கள் உங்களுடைய இதே உடலோடு உயிருடன் இருக்கிறீர்கள். ஆனால் அங்கே உங்களுக்குத் தேவையான அனைத்து

வெளிப்புறப் பொருட்களும் உங்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன. உங்களிடம் கண் இருக்கிறது ஆனால் அங்கே பார்ப்பதற்காக வெளிப்புற ஒளி இல்லை. உங்களிடம் வாய் இருக்கிறது. ஆனால் அங்கே உணவுப் பொருட்கள் அனைத்தும் மாயமாகிவிட்டன. உங்களிடம் கால்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே உங்களது கால்களுக்குக் கீழே இருந்த ஈர்ப்பு விசையைக் காணவில்லை. இன்னும் சொல்வதனால் அங்கே நீங்கள் தனியாக விடப்பட்டுவிட்டீர்கள். மனிதர்கள் அனைவரும் உங்கள் துணையைக் கைவிட்டுவிட்டனர்.

இது கற்பனையான விஷயம் அல்ல. ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கும் மரணத்திற்குப் பின் இந்த நிலைதான் ஏற்படப் போகிறது. அவர்களுக்கு மரணம் உறுதியாக வந்தே தீரும். இன்று உயிருடன் இருக்கும் எந்த ஒரு மனிதனும் ஒரு நாள் இறந்தே தீருவான். மரணத்திற்குப் பிறகு அவன் தன்னை இருக்கக் காணும் உலகம் என்பது மேலே குறிப்பிடப்பட்ட அதே உலகம்தான்.

வரவிருக்கும் அந்தநாள் ஒவ்வொருவரை நோக்கியும் விரைந்தோடி வருகிறது. ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரின் முதல் தேவையானது

*வரவிருக்கும் அந்த நாளை அறிவதும் அதற்கு ஆயத்தம் ஆவதும்தான். அந்த நாள் வரும் போது 'திரும்ப இயலாத புள்ளி'* (point of no return) *என்னும் அளவில்தான் வரும். அதன் பிறகு மனிதனால் பயனை அனுபவிக்க முடியுமே தவிர பின்னோக்கிச் சென்று மீண்டும் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள இயலாது.*

## இலக்கற்ற ஓட்டம்

*ஒவ்வொரு மனிதனும் சலிக்காமல் பேசிக்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தேவைகளை உச்சபட்ச நிலையில் பெருக்கி வைத்திருக்கின்றான். ஒவ்வொரு மனிதனும் எல்லையின்றி தனது ஆசைகளை நிறைவேற்ற விரும்புகிறான். ஒவ்வொரு மனிதனும் தனக்காகவும் தன்னுடைய பிள்ளைகளுக்காகவும் ஆடம்பரம், நிம்மதி ஆகியவற்றுக்கான அனைத்துப் பொருட்களையும் ஒன்று சேர்த்துவிட வேண்டும் என்று விரும்புகிறான். இது உலகத்தின்பால் குருட்டுத்தனமான ஓட்டம் ஆகும். ஆனால் விளைவது என்ன? ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆசைகள் நிறைவேறவில்லை என்ற உணர்வில் வாழ்கிறான். அவன் விரும்பிய முழுமையான மனநிறைவை அவனால் அடைய*

இயலவில்லை. ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரும் இழப்பின் இந்த மனநிலையில்தான் வாழ்கின்றனர். அவர்களுடைய இரவும் பகலும் இதே நிலையில் கழிந்து கொண்டிருக்க இறுதியில் அவர்களுடைய ஆசைகளின் மணல்வீடு சூழ்நிலைகளின் புயலோடு மோதிச் சிதறி விடுகிறது. சூழ்நிலைகள் இதனை உடைக்காவிட்டாலும் மரணம் எந்நிலையிலும் உரிய நேரத்தில் வந்து தனது இரக்கமற்ற முடிவை ஏற்றுக்கொள்ள பலவந்தப்படுத்தும். இந்த உலகில் இதற்கு முன் தோன்றிய எல்லா மனிதர்களும் மரணத்தின் இந்தத் தீர்ப்பை பலவந்தத்தின் பேரில் ஏற்றுக்கொண்டுதான் உள்ளனர்.

மனிதர்கள் மரணத்திற்கு முந்தைய தற்காலிக வாழ்க்கைக்கான பொருள்களை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மரணத்திற்குப் பிந்தைய நிரந்தர வாழ்க்கைக்காகத் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதுதான் அடிப்படைத் தேவையாக இருக்கிறது. மரணத்திற்கு முந்தைய வாழ்க்கை தேர்வுக்கான வாழ்க்கையாக இருக்கிறது. ஆதலால் ஒவ்வொருவருக்காகவும் தேர்வு எழுதத் தேவையான பொருள்களை ஏற்பாடு செய்து தருவது இறைவனின் பொறுப்பாக இருக்கிறது. ஆனால் மரணத்திற்குப் பிந்தைய வாழ்வைப்

பொறுத்தவரை அதற்கான பொறுப்பை இறைவன் எடுத்துக்கொள்ளவில்லை மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை முற்றிலும் மனிதனின் நற்செயல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

நீங்கள் ஒன்றுமே செய்யாவிட்டாலும் கூட ஒருதலைப்பட்சமாக உங்களுக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படுவது தற்கால உலகின் நியதியாக இருக்கிறது. ஆனால் அடுத்த வாழ்க்கை இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. ‘எதை விதைத்தாதோமோ அதையே அறுவடை செய்வோம்’ இதுதான் அடுத்த வாழ்க்கையின் நியதி. ஆனால் மனிதர்களோ தற்கால வாழ்க்கைக்காகத் துடிப்போடு போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அடுத்த வாழ்க்கையை முற்றிலும் மறந்துபோய் விட்டவர்களாக இருக்கின்றனர். தற்கால உலகில் இன்றைய குறையை நாளைய தினத்தில் அதிக நற்செயல்கள் புரிந்து ஈடு செய்துகொள்ள முடிகிறது. ஆனால் அடுத்த வாழ்க்கையில் ஆண், பெண் ஆகிய யாருக்கும் கடந்தகாலக் குறைகளை மீண்டும் ஈடுசெய்யும் வாய்ப்பு இருக்காது.

## துயரமான முடிவு

தற்கால உலகில் மனிதன் தன்னிடம் ஒரு முழுமையான உடல் இருப்பதைக் காண்கிறான். அவனுக்கு நிறைய நண்பர்களும் உறவினர்களும் இருக்கின்றனர். அவனுக்கு வேலை செய்ய வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அவனுக்கு வாழத் தேவையான அனைத்தும் கிடைத்திருக்கின்றன. வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து பொருட்களையும் அவன் தன்னைச் சுற்றி சேர்த்துக் கொண்டுள்ளான். 'வாழ்வாதாரத் துணை அமைப்பு' உலக அளவில் அவனுக்குத் துணையாக இருக்கின்றது. இது போல இன்னும் பல.

இவ்வனைத்துப் பொருள்களும் ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கும் இந்த உலகில் கிடைத்திருக்கிறது. அறிந்தோ அறியாமலோ இவற்றுக்கான அதிபதியாக அவன் தன்னை நினைத்துக் கொள்கிறான். 'இன்று எனக்குக் கிடைத்திருப்பவை எல்லாம் எப்போதும் என்னிடம் இருக்கும்' என அவன் எண்ணிக் கொள்கிறான். ஆனால் ஒரு குறுகிய காலக்கட்டத்திற்குப் பின் ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவருக்கும் மரணம் நேரிடுகிறது. தன்னுடைய எல்லாவற்றையும் விட்டுத் தனித்துப் போய் விடுவதும் தனிமையின் இதே

நிலையில் மற்றொரு உலகிற்குச் சென்று விடுவதும், மரணத்திற்கு முன்பு அவன் தன்னுடைய சொத்தாகக் கருதிய எந்தப் பொருளும் அங்கே இல்லாமல் போவதும், மனிதர்களாகிய ஒவ்வருவரோடும் நிகழக்கூடியதே. உறுதியாக மிகவும் கசப்பான இந்தப் பேருண்மையின் அனுபவத்தை ஒவ்வொருவரும் எதிர்கொண்டே ஆகவேண்டும். அன்று அவனுக்கு முன் 'முடிவற்ற காலம்' (eternity) இருக்கும். அதை எதிர்கொள்வதற்காக அவனிடம் எதுவும் இருக்காது.

ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு பொருள் இருக்கும். அது 'வாழ்க்கைச் சாதனங்கள்' எனப்படுகிறது. இதனோடு இன்னொரு பொருளும் இருக்கிறது. அதை அவனது 'சொந்தத் தகுதி நிலை' எனலாம். ஒவ்வொரு மனிதனும் கடுமையான முயற்சியால் தனக்கானஓர் இடத்தை உருவாக்குகிறான். சமூகத்தில் அவன் தனக்கான ஓர் அந்தஸ்தைப் பெறுகிறான். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உழைப்பால் தனிப்பட்ட வரலாற்றை உருவாக்குகிறான். அது ஒரு வகையில் அவனுடைய ஆளுமையின் பகுதியாகி விடுகிறது. இவ்வாறு அவன் சமூகத்தில் குறிப்பிட்டதோர் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கிறான். மனிதனின் இந்தத் தகுதியும்

*முழுமையான பொருளில் தற்காலிகமானதுதான். மரணம் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் திடீரென இந்தத் தகுதியைப் பறித்துக்கொள்கிறது. மரணத்திற்குப் பின்னான உலகில் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைச் சாதனங்களும் பறிக்கப்பட்டுவிடும். அவனால் உருவாக்கப்பட்ட அவனது வரலாறும் அவனை விட்டு விலகிவிடும். இந்நிலையில்தான் அவன் அந்த உலகிற்குள் நுழைவான். இந்தத் துயர் மிகு முடிவிலிருந்து ஒரே ஒரு மனிதன்தான் விலக்கைப் பெற்றவன்.அவன் மரணத்திற்குப் பின் வரவிருக்கின்ற சூழ்நிலைக்காக மரணத்திற்கு முன்பாகவே தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டவன் .*

## மரணத்திற்குப் பிந்தைய உலகம்

*ஒருநாள் நான் என்னுடைய அறையில் அமர்ந்திருந்தேன். வெளிப்புறத்திலிருந்து ஒரு பாடலின் சொற்கள் காதில் விழுந்தன. அதன் ஒரு வரி இவ்வாறு இருந்தது:“அந்த இரவுகள் எப்படிக் கழியும்... அந்தப் பொழுதுகள் எப்படிக் கழியும்.”*

*இதைக் கேட்டதும் திடீரென என் மனம் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையின்பால் சென்று விட்டது. நான் சிந்தித்துப் பார்த்தேன்.. மரணத்திற்கு*

முந்தைய வாழ்க்கைக் காலத்தில் மனிதனுக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது. அவனுக்குத் தாகம் ஏற்பட்டால் இங்கே தண்ணீர் இருக்கிறது. அவனுக்குப் பசி எடுத்தால் இங்கே பல்வேறு வகையான உணவுகள் இருக்கின்றன. இதுபோல அவனது தேவைக்கான அனைத்துப் பொருள்களும் முழுமையாக இங்கே கிடைத்திருக்கின்றன. உதாரணத்திற்கு வீடு, மரச்சாமான்கள், வாகனம், தொலைபேசி, வங்கி இருப்பு போன்றவை.

பிறகு நான் சிந்தித்துப் பார்த்தேன். இவையெல்லாம் மரணத்திற்கு முந்தைய காலக்கட்டத்திற்காக மட்டும்தான். மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக் காலத்தில் மனிதன் தன்னை எந்த ஒரு பொருளுமற்ற நிரந்தரப் பாலைவனத்தில் இருக்கக் காண்பான். திடீரென அவன் தன்னை முழுமையான இழப்பிற்குள்ளவனாகப் பெறுவான்.

எதிர் வரவிருக்கும் அந்த நாளை மனிதன் உண்மையிலேயே நினைத்துப் பார்த்தால் அவன் துடிதுடித்துப் போவான். அவனது கண்களில் துயரத்தின் கண்ணீர் வெளிப்பட்டுவிடும். அவன் “அந்த நாட்கள் எனக்கு எவ்வளவு இருள் நிறைந்தவையாக இருக்கும்... அந்த இரவுகள் எனக்கு

எவ்வளவு துன்பம் மிக்கதாக இருக்கும்..." என்று கூறுவான்.

இன்றைய சூழலில் மனிதனுக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது. ஆனால் நாளைய சூழலில் அவனிடமிருந்து அனைத்தும் பறிக்கப்பட்டு இருக்கும். இதுதான் மனிதனின் மிகப்பெரிய பிரச்சினை. ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரும் 'இன்று' குறித்துச் சிந்திப்பதை விட 'நாளை' குறித்தே சிந்திக்க வேண்டும்.

அவர்கள், வரவிருக்கும் விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்காகத் தங்களுடைய எதிர்காலத்தைச் சார்ந்து திட்டமிட வேண்டும் (future-oriented planning). இதை பைபிளில் பின்வரும் சொற்களில் கூறப்பட்டுள்ளது. "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்".

There will be wailing and gnashing of teeth. (Mathew 13: 42)

## மரணச் செய்தி

ஒரு மனிதருடைய வயது 75 ஆக இருந்தது. ஆரம்பக் காலத்தில் அவருடைய உடல்நிலை நன்றாக இருந்தது. இப்பொழுது அவரை நோய்கள் பிடித்துக்கொண்டன. இந்த நோய் அவருக்கு

மரணச் செய்தியாக இருந்தது. ஆனால் அவரோ இதை மருத்துவத்திற்கான ஒரு விஷயமாக மட்டுமே கருதினார். அவர் பல்வேறு மருத்துவர்களையும் மருத்துவமனைகளையும் அனுகினார். அவருடைய சொந்தச் சொத்து செலவாகிப் போனதும், கடன் வாங்கி தம்முடைய மிகப்பெரிய செலவைக் கொண்ட மருத்துவத்தைத் தொடங்கி விட்டார். ஆனால் அவருடைய உடல் நலம் திரும்பவில்லை. சில நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்து அந்த மனிதர் இறந்து போனார்.________ இது ஒரு மனிதருடைய கதை அல்ல; மாறாக ஆண், பெண் ஆகிய ஒவ்வொருடைய கதையும் இதுதான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் 'மரணம் நெருங்கிவிட்டது' என்பதற்கான அறிவிப்புதான் முதுமை என்பது. அதன் பிறகு அவன் இன்னும் உலுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். மனிதன் தூங்கிக் கொண்டிருந்தால் அவன் கண் விழிக்க வேண்டும்; அவன் விழித்துக் கொண்டான் என்றால் எழவேண்டும்; அவன் எழுந்து விட்டான் என்றால் நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் நோய்கள் வருகின்றன. முதுமையும் முதுமையைத் தொடர்ந்து வரக்கூடிய வலுவின்மை, நோய் போன்றவை ஏற்படுவதெல்லாம், 'மனிதன் திடுக்கிட்டு

எழ வேண்டும்; மரணத்திற்கு முன்பாகவே அவன் மரணத்திற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்; அவன் மரணத்திற்குப் பின் வரவிருக்கும் நிலை குறித்துச் சிந்தித்து அதன்படி தன்னுடைய வாழ்க்கையின் இறுதித் திட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்' என்பதற்காகத்தான்.

ஆனால் மனிதன் நிகழ்வுகளிலிருந்து படிப்பினை பெறுவதில்லை. முதுமையும் நோயும் 'மரண அறிவிப்பை' அளித்தும் கூட அவன் மரணம் குறித்துச் சிந்திக்காமல் மருத்துவம் குறித்து மட்டுமே சிந்திக்கிறான். அவன் மருத்துவர்களுக்குப் பின்னாலும் மருத்துவமனைகளுக்குப் பின்னாலும் ஓடுகிறான். இறுதியில் நம்பிக்கை இழந்தவனாக இறந்து விடுகிறான். இரண்டாம் பட்சமாக மனிதனுக்குக் கிடைப்பதெல்லாம் 'உடல் நலம்' அல்ல 'மரணம்' மட்டுமே!

இது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தினசரி வாழ்வில் தன்னைச் சுற்றி இருக்கும் சூழலில் நிகழக் காணும் ஓர் உண்மைதான். ஆனால் எந்த மனிதனும் இதிலிருந்து பாடம் பெறுவதில்லை. இந்த விஷயத்தில் ஒவ்வொரு மனிதனும் குருடனாக இருக்கின்றான். 'மரணம் அவனுடைய கண்ணைத் திறக்கட்டும்' என்று அவன் காத்திருக்கின்றான்.

ஆனால் மரணத்திற்குப் பின் ‘கண் திறப்பது’ யாருக்கும் எந்தப் பயனையும் தராது.

## மரணத்தின் படிப்பினை

நான் ஒருவருடைய மரணத்திற்குச் சென்றிருந்தேன். மரணம் அடைந்த அந்த நபர் குளிப்பாட்டப்பட்டார். அவருக்கு புதிய சவத்துணி அணிவிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் நின்று அவருக்கான தொழுகையை நடத்தினர். பிறகு அவர்கள் அந்த உடலைத் தமது தோள்களில் சுமந்து சென்று இறுதியில், சவக்குழியில் மரியாதையோடு படுக்க வைத்து அதை மூடிவிட்டனர். ‘ஓர் இறந்த உடலோடு இந்த அளவிற்கு மரியாதையோடு நடந்து கொள்ளுமாறு இஸ்லாமிய மார்க்கம் கட்டளையிட்டிருப்பதேன்?’ என்பதைக் குறித்து நான் சிந்தித்துப் பார்த்தேன். இறந்த பிறகு மனிதன் வெறும் மண்ணைத் தவிர வேறில்லை என்பது உண்மைதான். ஆனால் சாதாரண மண்ணைப்போல் அவனை இங்கும் அங்கும் எறிந்து விடுவதில்லை. மாறாக உயிருள்ள ஒரு மனிதனாக இருப்பதைப் போலவே அவனிடம் நாம் நடந்துகொள்கிறோம்.

‘மண்’ணிடம் ‘மனிதனை’ப் போல நடந்துகொள்ள இடப்பட்டுள்ள கட்டளையானது,

இறந்துபோன மனிதனை அடிப்படையாகக் கொண்டல்ல, மாறாக உயிருடன் இருக்கும் மனிதனை அடிப்படையாகக் கொண்டுதான். இறந்துபோன மனிதனின் மூலமாக உயிருள்ள மனிதர்களுக்கு "இறுதியில் உங்களுக்கு நிகழப்போவது என்ன?" என்பது குறித்துப் படிப்பினை வழங்கப்படுகிறது. 'உயிருள்ள மனிதர்கள் இறந்துபோன மனிதனின் வடிவில் தம்மைக் காண வேண்டும்; மரணத்திற்கு முன்பாகவே அவர்கள் மரணத்தை அனுபவ ரீதியாக உணர வேண்டும்' என்று இஸ்லாம் விரும்புகிறது. அந்த அனுபவம் வேறு வகையிலும் சாத்தியமானதுதான். அதாவது குறிப்பிட்ட ஒரு நாளில் காகிதத்தில் ஒரு மனிதச் சிலையை உருவாக்கி அதற்கான சடங்குகளை நிறைவேற்றி அதை சவக்குழியில் போட்டு விடலாம். ஆனால் இஸ்லாமிய மார்க்கம் இந்த அனுபவத்தை உண்மையானதாக ஆக்குவதற்காக உண்மையான மனிதனின் இறந்து போன உடலைப் பயன்படுத்தியிருக்கிறது.

ஒரு மனிதன் நம்மைப் போன்ற ஓர் உயிருள்ள மனிதனாக இருந்தான். நடந்து கொண்டிருந்த அவனுடைய கால்கள் செயலிழந்து போயின. பேசிக் கொண்டிருந்த அவனது நாவு நின்று போனது. பார்த்துக் கொண்டிருந்து அவனது

கண்கள் ஒளியிழந்து போயின. மனிதர்களிடையே அவனுக்கு இருந்த மதிப்பு திடீரென முடிவுக்கு வந்துவிட்டது. இப்பொழுது இந்த நிகழ்வை இறைவன் பயன்படுத்துகிறான். நம்மைப் போன்ற ஒரு மனிதனின் மூலமாக வாழ்க்கைக்கான பாடத்தை நினைவூட்ட வேண்டும் என்பதற்காக! இறந்த மனிதனை மரியாதையோடு தயார்படுத்திச் சுமந்து சென்று இறுதிக் கட்டமாக அவனைச் சவக்குழியில் படுக்க வைக்கும்போது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உள்ளங்கையில் மண்ணை எடுத்து மூன்று முறை சவக்குழியில் போடுகிறான். முதல் முறை மண்ணைப் போடும்போது "பூமியிலிருந்துதான் நாம் உங்களைப் படைத்தோம்" என்றும், இரண்டாவது முறை "அதிலேயே நாம் உங்களை சேர்த்து விடுவோம்" என்றும், மூன்றாவது முறை மண்ணைப் போடும்போது "அதிலிருந்தே மீண்டும் உங்களை வெளிப்படுத்துவோம்" என்றும் கூறுகின்றான். மூன்று முறை மண்ணைப் போடுவது என்பது இந்த முழு நிகழ்வின் உச்சக்கட்டமாக (climax) இருக்கிறது. இவ்வாறு உயிருள்ள ஒரு நிகழ்வின் மூலமாக 'மனிதன் எனப்படுபவன் யார்? அவனுடைய இறுதி முடிவு எப்படிப்பட்டது?' என்பவையெல்லாம் சொல்லப்படுகிறது.

# நம்முடைய மரணத் தொழுகை

*தில்லியில் முஸ்லிம் ஒருவர் இறந்து போனார். மரணத் தொழுகைக்குப் பின் அவர் ஓர் உள்ளூர் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டார். அந்த நிகழ்வில் தாமும் இருந்ததாக மவ்லானா ஜக்வான் நத்வி அவர்கள் குறிப்பிட்டார். தொழுகை தொடங்கவிருந்த பொழுது அவருக்கு அருகில் இருந்த ஒருவர், இந்தத் தொழுகையை (ஃபர்ளு) 'கடமை' என்று எண்ணித் தொழுவதா அல்லது (சுன்னா) 'நபிவழி' என்று எண்ணித் தொழுவதா?" என்று கேட்டார். அதற்கு அவர் "உங்களுடைய மரணத் தொழுகை நடக்கிறது என்று எண்ணிக் கொள்ளுங்கள்" என்றார். அந்த மனிதருக்குப் புரியவில்லை. சிறிது நேரம் கழித்து அந்த மனிதரிடம் அவர் "ஒருவர் இறந்து விட்டதற்காகத் தொழுவதென்பது வெறும் சடங்கல்ல; அது மிகப்பெரிய உண்மையின் நினைவூட்டல் ஆகும். அதாவது 'இறந்தவன் இறந்து விட்டதைப் போலவே நானும் இறக்கப் போகிறவன்' என்பதே அந்த உண்மை. மரணத்திற்காக ஒன்று சேர்ந்து தொழுவதென்பது உண்மையில் இந்த யதார்த்தத்தின் நினைவூட்டல்தான்." என்று கூறினார்.*

பிறருடைய மரண நிகழ்வில் தன்னுடைய மரணத்தை நினைத்துப் பார்க்கும் மனிதனுடைய தொழுகைதான் உண்மையான 'மரணத் தொழுகை'. மரணத்தைக் காணும் மனிதன் மரணத் தொழுகையை நிறைவேற்ற நிற்கும்பொழுது "என்னுடைய மரணத் தொழுகையை நான் தொழுது கொண்டிருக்கிறேன்" என்ற உணர்வோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'இன்று இன்னொருவன் மீது நிகழ்ந்து கொண்டிருப்பது நாளை என்னோடும் நிகழப் போகிறது' என்பதையும் அவன் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு நொடியும் மனிதன் மரணத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். பிறருடைய மரணத்தைக் கண்ணால் பார்த்தும் தன்னுடைய மரணம் நினைவுக்கு வராதவன் உணர்வற்ற கல்லைப் போன்றவன். வெளிப்புறத்தில் அவன் மனிதனாகத் தெரிந்தாலும் அவன் மனிதப் பண்புகளற்ற கற்சிலையைப் போன்றவனே. மரணத்தை நினைவு கூர்வது ஓர் உணர்ச்சி மிக்க (sensitive) மனிதனின் பண்பு. மரணத்தை நினைவு கூராமல் இருப்பது உணர்ச்சியற்ற (insensitive) மனிதனின் பண்பு.

## நினைவேந்தல் நிகழ்ச்சிகள்

*தற்காலத்தில் ஒரு பெரிய மனிதர் இறந்து விட்டால் 'நினைவேந்தல்' எனும் பெயரில் நிகழ்ச்சிகள் செய்யப்படுகின்றன. நாளிதழ்களில் நினைவேந்தல் கட்டுரைகள் அச்சிடப்படுகின்றன. இந்த முறை சந்தேகம் இன்றி ஒரு 'பித்அத்' (மார்க்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டது) ஆகும். இதுபோன்ற நினைவேந்தல்களோடு மார்க்கத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லை. இது ஒரு வெளிப்பாடு மட்டும்தான். இது இஸ்லாமியச் செயல் அல்ல. இது மார்க்கத்தில் புதிதாக நுழைக்கப்பட்டது (பித்அத்) என்பதற்கு உறுதியான சான்றாக இருப்பது, இறைத்தூதர்–அவர்களுடைய தோழர்கள் ஆகியோரின் காலத்தில் இதுபோன்ற நினைவேந்தல் ஆரவாரங்கள் நடைபெற்றதாக எந்த நிகழ்வும் நிரூபிக்கப்படவில்லை என்பதுதான்.*

*மரணம் குறித்த இஸ்லாமிய வழிமுறை என்பது என்ன? பிறருடைய மரணத்தைக் கண்டு தன்னுடைய மரணத்தை நினைத்துப் பார்ப்பது; தனிமையில் இறைவனிடம் தனக்காகவும் இறந்து போனவர்களுக்காகவும் இறைஞ்சி வேண்டுவது. மரண நிகழ்வு இறைவனின் புறத்திலிருந்து ஒரு*

நினைவூட்டல் ஆகும். அதாவது 'ஒரு மனிதனுக்கு மரணம் ஏற்பட்டு விட்டதைப் போலவே ஆண்கள் பெண்கள் ஆகிய அனைவருக்கும் மரணம் நேரும்' என்கின்ற நினைவூட்டல். மரண நிகழ்வை நினைவூட்டலாகப் பார்க்க வேண்டுமே அன்றி வேறு வகையில் அல்ல. இன்று முஸ்லிம்களிடையே வழக்கத்தில் இருக்கும் இது தொடர்பான மற்ற எல்லா வழிமுறைகளும் மார்க்கத்தில் புதிதாக நுழைக்கப்பட்டவைதாம். உறுதியாக 'பித்அத்' ஒரு கெடுவழியே அன்றி இஸ்லாமியச் செயல்பாடு அல்ல. ஒரு பெரிய மனிதரின் இறப்பிற்குப் பின் செய்யப்படும் 'நினைவேந்தல்' நிகழ்ச்சிகளிலும் 'நினைவேந்தல்' தொடர்பாக அளிக்கப்படும் கூற்றுகளிலும் இறந்துபோனவர் தொடர்பாகப் புகழ்ந்து பேசப்படுகிறதே அன்றி மரணத்தைக் குறித்து அல்ல. இது போன்ற சந்தர்ப்பங்களில் மரணத்தை நினைவு கூறுவதும் மரணம் குறித்த நம்முடைய புரிதலை உயிர் பெறச் செய்வதும் மரணத்திற்குப் பின் எதிர்கொள்ளவிருக்கும் கணக்கு வழக்குகளை நினைத்து இறைவனிடம் இறைஞ்சி வேண்டுவதும்தான் உண்மையான தேவையாக இருக்கிறது.

## சொர்க்கத்திற்கு உரியவன் யார்?

சொர்க்கம், மகிழ்ச்சி நிம்மதி ஆகியவற்றின் 'நினைத்துப் பார்க்க இயலாத' ஓர் இடமாக இருக்கிறது. 'நினைத்துப் பார்க்க இயலாத' பண்புகளின் விலையைக் கொடுத்து இதற்கான உரிமையை நிரூபிக்கும் மனிதர்களுக்கே சொர்க்கம் கிடைக்கிறது. நிரந்தரமான இறைவனுக்கு அருகில் நிரந்தர இருக்கையைப் பெறுவதற்குப் பெயர்தான் சொர்க்கம் என்பது (குர்ஆன் 54:55). இது போன்ற அசாதாரண இருப்பிடம், இதற்கான பெரிய விலையைக் கொடுக்கும் துணிவுடைய நற்பேறு பெற்ற மனிதர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.

சொர்க்கத்தில் கற்பனை செய்து பார்க்க இயலாத இருக்கையைப் பெறுவதற்காக மனிதன், கற்பனை செய்து பார்க்க இயலாத நற்செயல்களுக்குச் சான்றாக இருக்க வேண்டியதாகிறது. அதற்காக மனிதன், காண இயலாததைக் (unobservable) காண இயலும் (observable) ஒன்றாக ஆக்க வேண்டியதாகிறது. அவன் காலம், இடம் (time and space) ஆகியவற்றுடன் இருந்தும் அதற்கு வெளியே பார்க்கும் பார்வையை உருவாக்க வேண்டியதாகிறது. அவன் சொற்களின் இருள் சூழ்ந்த வனத்தில் பொருளின் ஒளியை பெற

வேண்டும்; அவன் ஆசைகளின் கடலில் இருந்து கொண்டே தன்னை அதில் மூழ்கி விடாமல் பாதுகாக்க வேண்டும். அவன் தற்பெருமையின் (egoism) மலையாக இருந்தும், தன்னைத் தற்பெருமை அற்றவனாக (egoless) ஆக்க வேண்டும். தீமையை விரும்புவோருக்கு இடையில் இருந்தும், அவன் தன்னை மனிதர்களின் நலம் விரும்பியாக (well-wisher) ஆக்கிக்கொள்ள வேண்டும். அவன் முழுமையான சுதந்திரத்தின் அதிபதியாக இருந்தும், சுய விருப்பத்தோடு தன்னை சரண் அடையச் செய்ய வேண்டும். அவன் பேசப்படாத சொற்களைச் செவியுற வேண்டும். அவன் கண்ணுக்குப் புலப்படாத பேருண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். பொய்களால் நிறைந்துள்ள உலகில் அவன் உண்மை பேசுபவன் என்பதை நிரூபிக்க வேண்டும். அவன் வாய்மையற்ற சூழலில் வாய்மை கொண்ட போக்கை உடையவனாக இருக்கவேண்டும்.

மறுமையில் இறைவனுடைய சொர்க்கத்தில் நுழையும் தகுதியுடையோரின் பட்டியலைத் தயார் செய்ய இறைவனின் வானவர்கள் இரவிலும் பகலிலும் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய மனிதர்களின் உயர்ந்த மெய்யறிவு, ஒவ்வொரு பொருளிலிருந்தும் கவனத்தைத் திருப்பி

ஓர் இறைவனையே தன்னுடைய முதன்மையான அக்கறையாகக் (supreme concern) கொள்ளத் தகுதியுடையவர்களாக ஆக்கி இருக்கிறது. இவர்களுடைய சொர்க்கப் பேரார்வம் உலகின் ஈர்ப்பு மிக்க ஒவ்வொரு பொருளையும் ஈர்ப்பற்றதாக ஆக்கிவிட்டது. இறைவனுடைய மகத்துவம் குறித்த உணர்வு, இவர்களுக்குள் கர்வம், பெருமை ஆகியவற்றின் அனைத்து உணர்ச்சிகளையும் ஒழித்துக் கட்டிவிட்டது. இறைவனுடைய பிடியின் அச்சம் இவர்களை இன்பங்களுக்கு இடையில் இருந்தும், இன்பங்களை அனுபவிக்கச் சாத்தியமற்ற நிலையை உருவாக்கிவிட்டது. பிறருக்குக் 'கேட்கத் தகுந்த சப்தங்கள்' இவர்களுக்குக் 'கேட்கத் தகாத சப்தங்கள்' ஆகிப் போயின. இவர்களுக்கு உலகின் முன்னேற்றமும் இழப்பும் ஒருசேர பொருள் அற்றவையாகத் தெரியத் தொடங்கிவிட்டன. இவர்களுடைய நிலையைச் சொல்வதானால், இவர்கள் தம்மைச் 'சரியானவர்கள்' என்று நிரூபிப்பதற்குப் பதிலாக 'நான் செய்தது தவறு' (I was wrong) என்று சொல்வதை மிகவும் விரும்புபவர்கள்.

சொர்க்கம் ஓர் உண்மையான இருப்பிடம் ஆகும். உண்மையான பண்புகளின் விலையைக் கொடுக்கும்பட்சத்தில் மட்டுமே அது கிடைக்கிறது.

*தற்கால உலகில் இறைவனைச் சார்ந்த பண்பாளர்களாகத் தம்மை ஆக்கிக்கொள்ளும் மனிதர்களே சொர்க்கத்தில் குடியமர்த்தத் தகுந்தவர்களாகக் கருதப்படுவர்.*

*சொர்க்கம் மர்மமான காரணங்களின் அடிப்படையில் ஒருவருக்குக் கிடைக்காது. மாறாக அது அறியப்பட்ட காரணங்களின் அடிப்படையில்தான் கிடைக்கும். அந்த அறியப்பட்ட காரணங்கள் எனப்படுபவை மனிதன் இந்த உலகில் தன்னை இறைவனைச் சார்ந்த பண்புகளைக் கொண்ட மனிதனாக உருவாக்கிகொள்ள வேண்டும் என்பதுதான். சொர்க்கம் நேர்மையான மனிதர்களின் குடியிருப்புப் பகுதியாக இருக்கிறது. தற்கால உலகில் நேர்மையான இந்த மனிதர்களுக்கான தேர்வுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போதைய உலக வாழ்வில் முற்றிலும் நேர்மையாளர்களாக நிரூபிக்கப்படுபவர்கள்தாம் மறுமையின் நிரந்தர உலகில் குடியமர்த்தப்படத் தகுந்தவர்கள்.*

## உயர்வான துணைவனின்பால்

*பழங்கால எகிப்து மன்னனின் மனைவி ஆசியாவிற்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டபோது அவருடைய நாவிலிருந்து*

பின்வரும் பிரார்த்தனை வெளிப்பட்டதாகத் திருக்குர்ஆனின் 66-ஆவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது: “என் இறைவா உன்னிடத்திலே சொர்க்கத்தில் எனக்காக ஒரு வீட்டை அமைத்துக் தருவாயாக!” (66:11) இது ஓர் எளிய இறைநம்பிக்கையாளரின் சொற்களில் செய்யப்பட்ட ஒரு பிரார்த்தனை. இதே பிரார்த்தனை இறுதித் தூதரின் நாவிலிருந்து தூதுத்துவப் பாங்கில் இவ்வாறு வெளிப்பட்டது “இறைவா உயர்ந்த துணைவனே!”


இவ்விரு பிரார்த்தனைகளும் தம்முடைய யதார்த்தத்தின் அடிப்படையில் ஒரே பொருள் கொண்டவைதாம். முதல் பிரார்த்தனை எளிய இறைநம்பிக்கையாளரின் சொற்களில் செய்யப்பட்ட பிரார்த்தனையாகவும், இரண்டாவது பிரார்த்தனை தூதுத்துவ மட்டத்தில் ஓர் இறைத்தூதரின் நாவிலிருந்து வெளிப்பட்ட பிரார்த்தனையாகவும் இருக்கிறது.

இவ்விரு பிரார்த்தனைகளும் உண்மையில் மரணம் குறித்து நம்பிக்கையாளர்கள் கொண்டுள்ள உணர்ச்சிகளின் வெளிப்பாடு ஆகும். ஓர் இறைநம்பிக்கையாளருக்கு மரண வேளை வரும்போது அவருடைய உணர்வு மேலே

குறிப்பிட்ட வகையிலான பிரார்த்தனையாக உருமாறி விடுகிறது என்பதுதான் இதன் பொருள். அந்தத் தருணத்தில் இறைநம்பிக்கையாளராக இருக்கும் ஒருவரது உணர்வு பின்வருமாறு இருக்க வேண்டும்: “உலக மக்களிடமிருந்து நான் பிரிந்து விடும்போது எனக்கு மகத்துவம் பொருந்திய இறைவனின் நெருக்கம் கிடைக்கப்பெற வேண்டும். மனிதர்களின் சபையிலிருந்து எழ வேண்டியிருந்தால் எனக்கு வானவர்களின் சபையில் சேரும் நற்பேறு கிடைக்கவேண்டும். மரணம், என்னைச் சார்ந்தவர்களின் தொடர்பை துண்டித்து விடும்போது நான் தனிமைப்படுத்தப்படக் கூடாது. மாறாக மிக உயர்ந்த சபையில் ‘இறைவனின் துணை’ என்னும் அருட்கொடை கிடைக்கப்பெற வேண்டும். என்னுடைய மரணப் பயணம் எனக்குச் சிறிய தோழமையிலிருந்து பெரிய தோழமையின்பால் செல்லும் பயணம் ஆகட்டும்.” இந்தப் பிரார்த்தனையின் அந்தஸ்து வெறும் ‘பிரார்த்தனைக்கான சொற்கள்’ என்ற அளவில் இல்லை. இது உண்மையான இறை நம்பிக்கையாளரின் அகவயமான துடிப்பின் சொல் வெளிப்பாடாக இருக்கிறது. தற்போதைய வாழ்க்கைக் காலத்தைக் காட்டிலும் அடுத்த வாழ்க்கைக் காலம் இதை விடச் சிறந்ததாக அமைய வேண்டும்

என்பதும், தேர்வுக்கான தற்போதைய உலகில் அவனுக்குத் தற்காலிகமாகக் கிடைத்திருக்கின்ற அருட்கொடைகள் மரணத்திற்குப் பிந்தைய உலகில் இறைவனின் மிக உயர்ந்த நிரந்தரமான அருட்கொடைகளாகக் கிடைக்க வேண்டும் என்பதும், மரணம் அவனுக்கு முழுமை பெறாத இந்த உலகிலிருந்து முழுமையான உலகில் நுழைவுக்கான வழியாக இருக்க வேண்டும் என்பதுமே ஓர் உண்மையான இறை நம்பிக்கையாளரின் ஆசையாக இருக்கும்.

************************************



**மவ்லானா வஹீதுத்தீன் கான்** (1925-2021) ஓர் இஸ்லாமிய அறிஞரும் ஆன்மிகத் தலைவரும் அமைதிச் செயல்பாட்டாளரும் ஆவார். உலக அமைதிக்கான அவரது முக்கிய பங்களிப்பிற்காக அவரது பணி சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

மவ்லானா அவர்கள் 200 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

அவை இஸ்லாத்தின் ஆன்மிக ஞானம், இறைத்தூதரின் வன்முறையற்ற அணுகுமுறை, நவீனத்துவம் மற்றும் பிற சமகால பிரச்சினைகளுடன் இஸ்லாத்தின் உறவு ஆகியவற்றைக் குறித்துப் பேசுகின்றன.

அவரது ஆங்கில திருக்குர்ஆன் மொழியாக்கம் எளிமையானதாகவும் தெளிவானதாகவும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருப்பதாகப் பரவலாகப் பாராட்டைப் பெற்றது. அவரது உருது, ஆங்கில மொழியாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சமகாலத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் திருக்குர்ஆனும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அமைதியின் கலாச்சாரத்தைப் பிரபலப்படுத்தவும் இஸ்லாத்தின் ஆன்மிகச் செய்தியை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவும் 2001 ஆம் ஆண்டு அவர் அமைதி மற்றும் ஆன்மிகத்திற்கான சர்வதேச மையத்தை (Cps International) தில்லியில் நிறுவினார்.

இஸ்லாமிய மார்க்கத்தின்படி அடிப்படையான பிரச்சினை, உலகைக் கட்டமைப்பது அல்ல. மாறாக மறுமைக்காக ஆயத்தப்படுவது. ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரின் அடிப்படையான பணியும் மரணத்திற்கு முந்தைய வாழ்க்கைக் காலத்தில் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக் காலத்திற்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதுதான். மரணத்திற்குப் பின் வரவிருக்கின்ற நிரந்தரமான வாழ்க்கைக் காலத்தில் வெற்றி பெற்ற மனிதர்களாக அறிவிக்கப்படும் அளவிற்கு அவர்கள் தம்முடைய தகுதிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

goodwordbooks.com cpsglobal.org

Goodword Books

CPS International
centre for peace & spirituality